☎ 04175 - 236654 / 235295

# SHANMUGA INDUSTRIES ARTS & SCIENCE COLLEGE (Co-Ed)

Certified Under Section 2 (f) & 12 B of UGC Act 1956, An ISO 9001 - 2015 Certified Institution

Permanently Affiliated to Thiruvalluvar University, Vellore and Approved by the Govt. of Tamil nadu & AICTE, New Delhi

Manalurpet Road, Tiruvannamalai - 606 603, shanmugacollege@gmail.com www.shanmugacollege.edu.in

15.10.2022

## சண்முகா கல்லூரியில்
## மேனாள் குடியரசுத்தலைவர், டாக்டர் APJ அப்துல் கலாம் பிறந்தநாள் விழா & இளைஞர் எழுச்சி நாள்

திருவண்ணாமலை சண்முகா தொழிற்சாலை கலை அறிவியல் கல்லூரியின் நாட்டுநலப்பணித்திட்டம், தமிழ்த்துறை மற்றும் IQAC இணைந்து **மேனாள் குடியரசுத்தலைவரும், விஞ்ஞானியும், சிறந்த கல்வியாளருமான டாக்டர் APJ அப்துல் கலாம்** அவர்களின் பிறந்தநாளை **இளைஞர் எழுச்சி நாள் (அக்டோபர் 15)** விழாவாக கொண்டாடின. முதலில் அவரது திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து, மலர்த்தூவி சிறப்புச் செய்யப்பட்டது.

இந்நிகழ்வில் கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் **டி.ஏ.எஸ்.முத்து** தலைமை வகித்தார். பொருளாளர் **எம்.சீனுவாசன்,** முன்னிலையுரையாற்றினார். கல்விப்புல முதன்மையர் பேராசிரியர் **அழ.உடையப்பன்** அவர்கள் மாணவர்களிடையே **டாக்டர் APJ அப்துல் கலாம்** அவர்களின் எளிமை, நேர்மை, உண்மை, தலைமை, உயரிய பண்பு, அறிவு, அறிவியல் ஆற்றல், படைப்புகள் முதலானவற்றை மேற்கோள் காட்டி, நாளைய தலைவர்களாக, மாமனிதர்களாக விளங்கக்கூடிய நீங்களும் அவரைப்போல வரவேண்டும் எனக் கூறி மிகச் சிறப்பாக எழுச்சியுரையாற்றினார். கல்லூரியின் முதல்வர் முனைவர் **கே.ஆனந்தராஜ்,** துணைமுதல்வர் முனைவர் **கோ.அண்ணாமலை** ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். முன்னதாகத் தமிழ்த்துறை இணைப்பேராசிரியர் **கு.இளங்கோவன்** வரவேற்புரையாற்றினார். தமிழ்த்துறை பேராசிரியர்கள் **செ.ப.பிரபு** கருத்துரையும், **ஜி.சன்மதி** தொகுப்புரையும் வழங்கினர்.

இந்நிகழ்ச்சியின் நிறைவில் நாட்டுநலப்பணித்திட்ட அலுவலர் பேராசிரியர் **டி.அருண்குமார்** நன்றியுரையாற்றினார். அனைத்து துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள், அலுவலகப் பணியாளர்கள், மாணவர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**செயலர் & தாளாளர்**


NOT ME !
BUT YOU !!
சண்முகா தொழிற்சாலை
கலை அறிவியல் கல்லூரி